




தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் வேலூர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் நேற்று முன்தினம் ஆய்வு மேற்கொண்டார்கள். அங்கிருந்த நீச்சல் குளத்தைப் பார்வையிட்டு வீரர்கள், வீராங்கனைகளுடன் கலந்துரையாடினர். மேலும் ரூ.10.81 கோடி மதிப்பில் அங்கு கட்டப்பட்டு வரும் புதிய விளையாட்டு உள் அரங்கைப் பார்வையிட்டு அதன் பணிகளை விரைந்து முடிக்க வலியுறுத்தினர். மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.






மக்கள் நலன் காக்க அவர்களின் தேவை அறிந்து உதவி வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிடமாடல் அரசின் ஒரு பகுதியாக ஜோலார்பேட்டையில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில், திருப்பத்தூர் மாவட்டத்தைச் சார்ந்த மாற்றுத்திறனாளிகள், விவசாயிகள், மகளிர், மாணவச் செல்வங்கள் என மொத்தம் 14,253 பயனாளிகளுக்கு அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் ரூ.73.96 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி, கதிர்ஆனந்த் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் அ.நல்லதம்பி, வில்வநாதன் உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்,






தமிழ்நாட்டின் சுயமரியாதை காக்க பேரறிஞர் அண்ணா அவர்கள் உயர்த்தி பிடித்த பெருமைமிகு இருவண்ணக் கொடி – அவர் தம்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு வாணியம்பாடியில் அமைக்கப்பட்டுள்ள புதிய கொடி கம்பத்தில் கருப்பு – சிவப்பு இரு வண்ணக் கொடியை, கழக இளைஞர் அணிச் செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஏற்றி வைத்தார். உடன் பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மாவட்டச் செயலாளர் க.தேவராஜ் எம்.எல்.ஏ. மற்றும் கழக முன்னணியினர் உள்ளனர். அதுபோது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து வரவேற்றனர்.